***Paper ID:*** *RIBF05*

# கல்முனை முஸ்லிம் ஆசிரியைகள் மத்தியில் இஸ்லாமிய வங்கி முறைபற்றிய விழிப்புணர்வு

**M.I.M. Jazeel [1], and M.I. Majitha Banu [2]**

[1]*Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka, Oluvil.*
*majithafiras@gmail.com, jazeelmi@seu.ac.lk*

***ஆய்வுச்சுருக்கம்***

*இலங்கையில் வளர்ச்சியடைந்துவரும் ஒருதுறையாக இஸ்லாமிய வங்கிமுறை காணப்படுகிறது. வங்கித்துறையின் வளர்ச்சியில், அதுகுறித்து மக்கள் மத்தியில் காணப்படும் விழிப்புணர்வானது பாரியதாக்கம் செலுத்தவல்லது. அந்தவகையில் இஸ்லாமிய வங்கி முறை குறித்து, கற்றறிந்த சமூகப் பிரிவான ஆசிரியைகள் மத்தியில் காணப்படும் விழிப்புணர்வு மட்டத்தினை அறிவது இவ்வாய்வின் பிரதான குறிக்கோளாக உள்ளது. அத்தோடு, இத்துறைபற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வினைத்திறன்மிக்க வழிமுறையினை இனங்காண்பதும் இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. அடிப்படையில் பண்புரீதியான இவ்வாய்வானது தொகைரீதியான தரவுகளையும் பயன்படுத்தியுள்ளது. இவ்வாய்வில் முதன்மைத் தரவுகள், கல்முனை முஸ்லிம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 200 ஆசிரியைகளிடமிருந்து அளவியல், வினாக்கொத்து மூலம் திரட்டப்பட்டு, MSExcel, SPSS ஆகிய மென்பொருட்களைப் பயன்படுத்தி பகுப்பாய்வுசெய்யப்பட்டுள்ளன. மேலும் இவ்வாய்வின் கோட்பாடு அமைப்புத்திட்டத்தினை வடிவமைப்பதற்காக புத்தகங்கள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தளங்கள் போன்ற இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வு மூலம், கல்முனை முஸ்லிம் பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட முஸ்லிம் ஆசிரியைகள் மத்தியில் இஸ்லாமிய வங்கி பற்றிய குறிப்பிடத்தக்களவு விழிப்புணர்வு இல்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் இவ்வாசிரியைகள் பெரும்பாலும் இஸ்லாமியவங்கி முறை பற்றி அறிமுக அறிவையேனும் பெற்றில்லை. இஸ்லாம் தொடர்பான விடயங்களைச் செவிமடுப்பதில் போதிய ஆர்வம் இன்மையால் இவ்வங்கி பற்றிய விழிப்புணர்வினைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புகளை அவர்கள் பயன்படுத்த முற்படவில்லை. மற்றும் வட்டித்தொடர்பு பரிவர்த்தனை ஏற்படுத்தும் பாதிப்புக்களை தவிர்த்தலில் அவர்கள் கரிசனை கொண்டுமில்லை. மேலும், விழிப்புணர்வினை வழங்கக் கூடிய வினைத்திறன் மிக்க வழிமுறைகளாக, பாடசாலைமட்டத்தில் இடம்பெறும் கருத்தரங்குகள் மற்றும் அறிவுறுத்தல் நிகழ்வுகள் என்பன இனங்காணப்பட்டுள்ளன. இவ்வாய்வினை, இஸ்லாமிய வங்கிகள் எதிர்காலத்தில் தமது விழிப்புணர்வூட்டற் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான வழிகாட்டியாகக் கொள்ளமுடியும்.*

***பிரதான சொற்கள்****:  இஸ்லாமிய வங்கி, விழிப்புணர்வு, கல்முனை முஸ்லிம்*

## அறிமுகம்

இஸ்லாம் பொருளியலிற்காக வகுத்துத்தந்துள்ள கொள்கைகளும் நடைமுறைகளும் தொன்றுதொட்டு பின்பற்றப்பட்டுவருகின்றது. அதன் நவீன வடிவமாக இஸ்லாமிய வங்கியியல் தற்காலத்தில் காணப்படுகின்றது. இது தனது பரிணாம வளர்ச்சியில் பாரிய முன்னேற்றம் கண்டுவருகின்றது. இஸ்லாமிய வங்கித் துறையானது வருடத்திற்கு சராசரியாக 15% வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்றது. இது தற்கால உலகின் நிதிச்சந்தையில் மிக வேகமாக வளர்ந்து கொண்டுவரும் ஒரு துறையாக காணப்படுகின்றது என ஆய்வுகள் கூறுகின்றன. (Saidi, 2007; Chong & Liu, 2008). இத்துறையில் பாரிய வளர்ச்சி கண்டு வரும் நாடுகளாக மலேசியா, பஹ்ரைன், ஜோர்தான், குவைத், கட்டார், சவூதி அரேபியா, துருக்கி, ஐக்கிய அரபு இராட்சியம் போன்ற நாடுகள் பதிவாகியுள்ளன. குறிப்பாக இலங்கையிலும் இது வளர்ந்து கொண்டுவரும்

ஒரு துறையாக காணப்படுகின்றது. இஸ்லாமிய வங்கிக்கான சொத்துக்களும் வாடிக்கையாளர்களும் முதலீடுகளும் அதிகரித்து பலம் பெற்று வருவதாக அறிக்கைகள் தெளிவுபடுத்துகின்றன. (அமானா ஆண்டறிக்கை 2012) எனினும் பாரம்பரிய வங்கிகள் தற்காலத்தில் தலைதூக்கி நிற்பதானது இதற்கு ஒரு பாரிய சவாலாக காணப்படுகின்றது. இச்சூழ்நிலையில் தங்கள் பொருளாதார நடவடிக்கைகளை செவ்வனே தூய ஷரீஆ முறையில் கொண்டு செல்வதற்காக இஸ்லாமிய வங்கியியலானது பாரம்பரிய வங்கிச் சேவைகளில் சிலவற்றை இஸ்லாமிய ஷரீஆவிற்கும், கொள்கைகளுக்கும் முரண்படாத வகையில் வடிவமைத்தல் மற்றும் மாற்றுவழியை உருவாக்குதல் மூலமாக மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குகிறது.

இஸ்லாமிய வங்கித்துறையின் வெற்றியானது அது பற்றி மக்கள் மத்தியிலுள்ள விழிப்புணர்வில் தங்கியுள்ளது. இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வானது அதன்மீதான ஈடுபாட்டில் செல்வாக்கு செலுத்துகிறது என ஆய்வுகள் கூறுகின்றன. (Barathy Doraisamy, Arunagiri Shanmugam & Ravindran Raman,2011). கல்வியறிவு படைத்தவர்கள் மத்தியில் இது பற்றிய விழிப்புணர்வு அவசியமாகும். ஏனெனில், இதன்மூலம் ஏனையவர்களும் விழிப்புணர்வூட்டப்பட அதிக வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. குறிப்பாக முஸ்லிம் ஆசிரியைகள் இது தொடர்பில் விழிப்புணர்வு பெற்றிருக்க கடமைப்பட்டுள்ளனர். ஏனெனில் தற்காலத்தில் சம்பளப்பணத்தை வங்கியினூடாகப் பெற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள இவர்கள் வங்கியுடன் ஈடுபாடு கொண்டவர்களாக உள்ளனர். எனவே, இப்பின்னணியில் காணப்படும் கல்முனை பிரதேச செயலக முஸ்லிம் பிரிவுக்குட்பட்ட முஸ்லிம் ஆசிரியைகள் மத்தியில் இஸ்லாமிய வங்கி முறை தொடர்பான விழிப்புணர்வு மட்டத்தினை கண்டறிந்து, விழிப்புணர்வு கூடுதலாக அல்லது குறைவாக காணப்படுவதற்கான காரணங்களை இனங்காண்பதோடு, விழிப்புணர்வினை பெற்றுக்கொள்ளக்கூடிய வினைத்திறன் மிக்க வழிமுறைகளையும் இனங்காண இவ்வாய்வு முயல்கிறது.

**ஆய்வுப் பிரதேச அறிமுகம்**

இலங்கை அம்பாரை மாவட்டத்தில் உள்ள கல்முனை பிரதேசத்தை மையமாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்படவுள்ளது. ''கல்முனை முஸ்லிம் ஆசிரியைகள் மத்தியில் இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வு'' தொடர்பாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படவுள்ளதால் கல்முனை பிரதேச செயலக முஸ்லிம் பிரிவுக்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த முஸ்லிம் பாடசாலைகள் முழுமையாக இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இப்பிரதேசமானது 57.91 சதுர கிலோமீற்றர் பரப்பெல்லையை கொண்டது. குறிப்பாக பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவு, மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, இஸ்லாமபாத், கல்முனைக்குடி, நற்பிட்டிமுனை ஆகிய கிராமங்கள் இவ்வாய்வின் பரப்பெல்லையாக கொள்ளப்பட்டுள்ளன.

**ஆய்வுப் பிரச்சினை**

இஸ்லாமிய வங்கி துறை வளர்ச்சியடைந்து கொண்டு வரும் இக்காலகட்டத்தில், பொருளாதார நடவடிக்கைகளில் தூய ஷரீஆவினை பின்பற்றி நடப்பதற்கான வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதில் ஈடுபடுவது கடமையாகின்றது. தற்கால இஸ்லாமிய வங்கி முறையானது பாரம்பரிய வங்கி முறைக்கான மாற்றுவழியாக காணப்படுகின்றது. இந்நிலையில் எனது ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட குடித்தொகையானது முழுக்க முழுக்க முஸ்லிம்களையும் வங்கியுடன் ஈடுபாடு கொண்டவர்களையும் உள்ளடக்கியிருப்பதால் இவர்கள் மத்தியில் இஸ்லாமிய வங்கி முறை பற்றிய விழிப்புணர்வு அவசியமாகின்றது. எனவே இவர்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வு எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை அறிவதோடு, விழிப்புணர்வுக்கான செயற்திறன்மிக்க வழிமுறைகளையும் கண்டறிவதும் இவ்வாய்வின் பிரச்சினைகளாகக் கொள்ளப்படுகின்றன.

**ஆய்வின் நோக்கம்**

இப்பிரதேச ஆசிரியைகளின் இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வு மட்டத்தை அறிவதனை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ள அதேவேளை, விழிப்புணர்வு மட்டம் கூடுதலாக அல்லது குறைவாக காணப்படுவதற்கான காரணத்தை கண்டறிதல் மற்றும் விழிப்புணர்வினை பெற்றுக்கொள்ளக்கூடிய வினைத்திறன்மிக்க வழிமுறைகளைக் கண்டறிதல் ஆகியவற்றை உபநோக்கங்களாகவும் இவ்வாய்வு கொண்டுள்ளது.


**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வுக்காக கல்முனை பிரதேச முஸ்லிம் பிரிவின் 16 பாடசாலைகளிலும் 200 ஆசிரியைகளைக் கொண்ட மாதிரித் தொகையானது ஆய்வாளரினால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வு பண்பு ரீதியானதாகும் (Qualitative Data). ஆயினும், தொகை ரீதியான தரவுகளும் (Quantitative Data) இதில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வானது முதலாம் நிலைத் தரவுகள் (Primary Data) மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary Data) ஆகிய இரு வழி முறைகளில் தரவுகளை சேகரித்துள்ளது. முதலாம் நிலைத் தரவில் வினாக்கொத்து (Questionnaire), நேர்காணல் (Interview) போன்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகள் வங்கி வெளியீடுகள், ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தள ஆக்கங்கள், முன்னைய ஆய்வுகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன. இவ்வாய்வுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள இரண்டாம் நிலைத் தரவுகள் இவ்வாய்வின் கோட்பாட்டினை உருவாக்குவதற்கு துணை செய்தன. இவ்வாறாக சேகரிக்கப்பட்ட தரவுகள் MS – EXCEL, SPSS மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

**ஆய்வின் கண்டறிதல்கள்**

கல்வியறிவுபடைத்தவர்களும்; முஸ்லிம்களும்; வங்கியுடன் நிர்ப்பந்த ரீதியில் தொடர்பு வைத்துள்ளவர்களுமான ஆசிரியைகள் மத்தியில் இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வு காணப்படுவது அவசியமானதாகும். ஆய்வுப்பிரதேச முஸ்லிம் ஆசிரியைகளின் இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வு எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை வினாக்கொத்து பகுப்பாய்வில் கண்டுகொள்ள முடிந்தது.

வரைபடம் 01 - கணக்கு வைத்துள்ள வங்கி விபரம்




வரைபடம் 01 இஸ்லாமிய வங்கியில் குறைவானோர் (24%) கணக்கு வைத்திருப்பதனைக் காட்டுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது ஆய்வுப்பிரதேசத்தைச் சேர்ந்த பெரும்பாலான ஆசிரியைகள் இஸ்லாமிய வங்கியை விட பாரம்பரிய வங்கியிலேயே தொடர்பு வைத்துள்ளனர். இதற்கு இவர்களிடமுள்ள இஸ்லாமிய வங்கி பற்றிய அறிவுப் பற்றாக்குறை காரணம் எனக் கொள்ளலாம் என்பதனைத் தரவுகள் காண்பிக்கின்றன. இஸ்லாமிய வங்கி என்றால் என்ன? அது எவ்வாறு இயங்குகின்றது? பாரம்பரிய வங்கி எவ்வாறு இயங்குகின்றது? பாரம்பரிய வங்கியை ஏன் தவிர்த்துக் கொள்ள வேண்டும்? போன்ற விடயங்கள் தொடர்பான பூரண அறிவே மக்களை இஸ்லாமிய வங்கியை நோக்கி கவரச் செய்யும். இத்தகைய அறிவே இஸ்லாமிய வங்கி குறித்து விழிப்படையச் செய்யும். எனவே இதனை ஏற்படுத்துவதற்கும் அதிகரிப்பதற்கும் விழிப்புணர்வூட்டற் செயற்பாடுகள் வினைத்திறன் மிக்க வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறாக இஸ்லாமிய வங்கி மீதான ஈடுபாடு குறைவாக காணப்படுவதற்கான பிரதான காரணம் விழிப்புணர்வுப் பற்றாக்குறையாகும்.

இஸ்லாமிய வங்கியில் ஈடுபாடுகொண்டவர்கள் மத்தியில் ஓரளவு விழிப்புணர்வு காணப்படுகின்றது என்பதனை, இஸ்லாமிய வங்கிகளில் கணக்கு வைத்துள்ளமைக்கான காரணங்கள் குறித்த அவர்களது கருத்துக்கள் மூலம் அறிய முடிகிறது. இதனை நாம் அட்டவணை 01 இல் தெளிவாக அவதானிக்கலாம். அட்டவணை 01 இன் தரவுகளை நோக்குகையில், 50 வீதத்திற்கும் அதிகமானோர் (52%) பாரம்பரிய வங்கி, வட்டியுடன் தொடர்புபட்டது என்பதனால் இஸ்லாமிய வங்கியில் கணக்கு வைத்துள்ளனர். அதேபோன்று, இஸ்லாமிய வங்கி தூய ஷரீஆ முறையில் நடைபெறுகின்றமையினால் அரைப்பகுதியினை அண்மித்தளவான ஆசிரியைகள் (47%) இவ்வங்கியில் கணக்கு வைத்துள்ளனர்.

அட்டவணை 01 - இஸ்லாமிய வங்கிகளில் கணக்கு வைத்துள்ளமைக்கான காரணங்கள் பற்றிய விபரம்

| | QUESTIONS | FREQ | % |
|---|---|---|---|
| 01 | பாரம்பரிய வங்கி வட்டியுடன் தொடர்புபட்டது | 20 | 52% |
| 02 | இஸ்லாமிய வங்கி ஷரீஆ முறையில் நடைபெறுகின்றது. | 18 | 47% |
| 03 | இஸ்லாமிய பொருளாதார முறையை ஊக்குவிப்பதற்காக | 3 | 8% |
| 04 | இஸ்லாமிய வங்கிகள் இனச்சார்பானதாக காணப்படுகின்றன. | 2 | 5% |
| 05 | பெண்கள் கௌரவமாக கவனிக்கப்படுகின்றனர். | 2 | 5% |
| 06 | நெருக்கடியில்லாத அமைதியான சூழல் | 4 | 10% |
| 07 | இஸ்லாமிய முறையிலமைந்த அக, புறச் சூழல் | 2 | 5% |
| 08 | வட்டியற்ற சிறுவர் சேமிப்புக்கணக்கு இங்கு உள்ளது. | 5 | 13% |
| 09 | ஆசிரியைகளுக்கான விஷேட சலுகை இங்கு கிடைக்கிறது. | 2 | 5% |
| 10 | இஸ்லாமிய வங்கி சௌகரிகமான இடத்தில் உள்ளது. | 4 | 10% |
| 11 | கணவனுடனான Joint Account ற்காக | 11 | 29% |
| 12 | வங்கி முகாமையாளர், ஊழியர்கள் எனக்கு பழக்கமானவர்கள். | 3 | 8% |
| 13 | நண்பி/கணவன் இங்கு கணக்கு வைத்துள்ளார | 4 | 10% |
| 14 | வாகன/வீட்டுக் கடன் பெறும் நோக்கில் | 3 | 8% |
| 15 | இங்கு Compulsary Deposit, Service charge இல்லை. | 1 | 3% |
| 16 | இவ்வங்கி உயர்ந்த வாடிக்கையாளர் சேவை கொண்டது. | 1 | 3% |

இதனடிப்படையில் நோக்கும் போது இஸ்லாமிய வங்கியில் ஈடுபடுவோரில் கிட்டத்தட்ட அரைப் பகுதியினர் இஸ்லாமிய வங்கி பற்றி விழிப்புணர்வு பெற்றுள்ள அதேவேளை மீதமுள்ள கிட்டத்தட்ட 50 வீதமானோர் இது தொடர்பில் போதியளவு விழிப்புணர்வு பெறவில்லை என்பது புலனாகின்றது. இவ்வாறான காரணங்களுக்காக இஸ்லாமிய வங்கியில் கணக்கு வைத்துள்ளவர்களைப் பொறுத்தவரையில், பொதுவாக இவர்களிடமுள்ள வட்டி மீதான கரிசனையே இவ்வாறு இஸ்லாமிய வங்கியில் கணக்கு வைப்பதற்கு வழிகோலியுள்ளது எனக் கூறலாம். அதுமட்டுமல்லாமல் இஸ்லாமிய வங்கி பற்றிய அறிவும் விழிப்புணர்வும் கூட இவர்கள் மத்தியில் தாக்கம் செலுத்தியுள்ளன எனவும் கூறலாம்.

சிறு தொகையினர் (13%) சிறுவர் சேமிப்புக்கணக்கினை வட்டியற்ற முறையில் மேற்கொள்வதற்காக இஸ்லாமிய வங்கியில் கணக்கினை வைத்துள்ளனர். இவர்கள் தங்களிடமுள்ள வட்டி பற்றிய அறிவினாலும், இஸ்லாமிய வங்கி பற்றிய தெளிவான விழிப்புணர்வு கிடைத்தமையினாலும் இவ்வாறு இஸ்லாமிய வங்கியுடன் தொடர்பு வைத்துள்ளனர் என்பது புலனாகின்றது. மேலும் 1/3 பகுதியினை அண்மித்தளவானோர் கணவனுடனான கூட்டுக்கணக்கினை பேணுவதற்காகவும் இஸ்லாமிய வங்கியில் கணக்கு வைத்துள்ளனர். இந்த நோக்கத்தில் இஸ்லாமிய வங்கியில் கணக்கு வைத்துள்ள ஆசிரியைகளை நோக்கும் போது, அவர்கள் அனைவரும் இஸ்லாமிய வங்கி பற்றி பூரண அறிவு மற்றும் விழிப்புணர்வு பெற்ற நிலையில் அங்கு கணக்கு வைத்துள்ளனர் என்று கூறமுடியாது. ஏனெனில் எந்தவொரு விழிப்புணர்வும் அற்ற நிலையில் கணவனின் தேவை மற்றும் வேண்டுகோளின் பிரகாரமும்

இவர்கள் இங்கு கணக்கு வைத்திருக்கின்றனர். எனினும், இவ்வாய்விலிருந்து பெறப்பட்ட தரவுகளின்படி, இவ்வாசிரியைகள் இஸ்லாமிய வங்கியில் கணக்கு வைப்பதற்கு ஏனைய காரணங்கள் பெரிதும் துணைசெய்யவில்லை. இஸ்லாமிய வங்கியில் கணக்கு வைத்த ஆசிரியைகளில் பெரும்பாலோர் பாரம்பரிய வங்கிகளிலும் கணக்கினை வைத்துள்ளனர். இதற்கான காரணத்தை விளக்குவதாக அட்டவணை 02 அமைந்துள்ளது.

அட்டவணை 02 - இஸ்லாமிய வங்கியிலும் பாரம்பரிய வங்கியிலும் கணக்கு வைத்ததற்கான காரணங்கள்

| | | FREQ | % |
|---|---|---|---|
| 1 | இஸ்லாமிய வங்கியில் பாரிய கடன் சேவை இல்லை. | 04 | 10% |
| 2 | இஸ்லாமிய வங்கியில் அடகு சேவை இல்லை. | 02 | 5% |
| 3 | பாரம்பரிய வங்கிக் கிளைகள் அதிகமாக காணப்படுவதனால் பணம் பெறுவது இலகு | 10 | 26% |
| 4 | விஷேட சலுகையை பெறும் நோக்கில் சம்பளத்தை பெற இஸ்லாமிய வங்கியில் கணக்கினை வைத்துள்ளேன். | 01 | 3% |
| 5 | இஸ்லாமிய வங்கி சேய்மையில் அமைந்துள்ளது. | 06 | 19% |
| 6 | அவசர தேவைக்காக அண்மையிலுள்ள பாரம்பரிய வங்கியை நாடவேண்டியுள்ளது. | 07 | 32% |
| 7 | பாரம்பரிய வங்கிக்கணக்கு ஆரம்பத்திலிருந்து வைத்திருந்தமையினால் தொடர்ந்தும் பேணப்படுகின்றது. | 12 | 3% |
| 8 | ஆரம்பத்திலிருந்த பாரம்பரிய வங்கிக்கணக்கினை மூடவுமில்லை; பாவிக்கவுமில்லை. | 01 | 3% |
| 9 | சம்பளம் பெற பாரம்பரிய வங்கியும் ஏனைய சேமிப்புத் தேவைகளுக்கு இஸ்லாமிய வங்கியும் பயன்படுத்தப்படுகின்றது. | 13 | 34% |
| 10 | கணவனுடனான Joint Account இற்காக பாரம்பரிய வங்கியிலும் கணக்குண்டு. | 02 | 5% |
| 11 | இஸ்லாமிய வங்கியில் வாகன/வீட்டுக்கடனை பணமாக பெறமுடியாது. | 01 | 3% |
| 12 | கணவனின் தேவை நிமிர்த்தம் இருவகையான வங்கிகளிலும் கணக்குண்டு. | 03 | 8% |
| 13 | இஸ்லாமிய வங்கியின் வீடு/வாகனக் கடனிற்கான மொத்த தொகை பாரம்பரிய வங்கியை விட அதிகமானது. | -- | -- |
| 14 | இறைதண்டனையிலிருந்து தப்பிக்கொள்வதற்காக இஸ்லாமிய வங்கியிலும் கணக்கு வைத்துள்ளேன். | 05 | 13% |
| 15 | நன்கு பழக்கமான இஸ்லாமிய வங்கி ஊழியர் கோரியதனால் அங்கும் கணக்கு வைத்துள்ளேன். | 03 | 8% |

இது தொடர்பில் பெறப்பட்ட தரவுகளை நோக்குகையில், சம்பளம் பெற பாரம்பரிய வங்கியும் ஏனைய சேமிப்புத் தேவைகளுக்கு இஸ்லாமிய வங்கியும் பயன்படுத்தப்படுகின்றது எனும் காரணத்தினை இஸ்லாமிய வங்கியில் கணக்கு வைத்திருக்கும் ஆசிரியைகளுள் 1/3 பகுதியினர் (34%) கொண்டுள்ளனர். இதனடிப்படையில் நோக்கும் போது, இஸ்லாமிய வங்கியில் கணக்கு வைத்திருக்கும் ஆசிரியைகளில் அதிகமானோர் பூரணமாக விழிப்புணர்வினை பெறவில்லை என்பது புலனாகின்றது. ஏனெனில் வட்டியுடன் தொடர்புபட்ட வங்கியில் ஈடுபாடு காட்டுவதானது,

வட்டியுடன் தொடர்புறச்செய்ய அதிக வாய்ப்பை ஏற்படுத்தும். சம்பளத்தைப் பெற தாமதிக்கும் பட்சத்தில் வட்டிக்குட்படும் நிலை ஏற்படும். அதுமட்டுமல்லாமல் இது வட்டித்தொழிலை ஊக்குவிக்கும் செயற்பாடாகவும் அமைகின்றது. அதுமட்டுமல்லாது, கிட்டத்தட்ட 1/3 (34%) பகுதியினர் அவசர தேவையின் போது அண்மையிலுள்ள பாரம்பரிய வங்கியை நாட வேண்டியுள்ளமையினாலும், குறிப்பிடத்தக்க அளவானோர் (26%) பாரம்பரிய வங்கிக் கிளைகள் அதிகமாக காணப்படுகின்றமையினால் இலகுவாகப் பணம் பெற முடியுமாக இருப்பதனாலும், சிறிதளவானோர் (19%) இஸ்லாமிய வங்கி சேய்மையிலுள்ளதனாலும் பாரம்பரிய வங்கிகளிலும் கணக்கு வைத்துள்ளனர். இவர்களது நிலை குறித்து கூறும்போது, வட்டி பற்றி போதியளவு அறிவும் பெற்று, இஸ்லாமிய வங்கி குறித்து விழிப்புணர்வும் பெற்ற நிலையிலுள்ள இவ்வாசிரியைகள் குறிப்பிட்ட சில உலகாயுத நோக்கங்களுக்காக இரு வகையான வங்கிகளிலும் கணக்கு வைத்துள்ளனர் என்பது புலனாகின்றது. எது எவ்வாறாயினும், இருவகையான வங்கிகளிலும் வங்கிக்கணக்கினை வைத்திருப்பதென்பதானது, இவர்கள் மத்தியில் இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வு போதியளவு இல்லை என்பதனையே எடுத்துக்காட்டுகின்றது.

அட்டவணை 03 - இஸ்லாமிய வங்கி முறை குறித்த அறிவு பற்றிய விபரம்

| | | ***FREQUENCY*** | | | | ***PERCENTAGE*** | | | | ***Mean*** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ***QUESTIONS*** | ***Great*** | ***Normal*** | ***Poor*** | ***Not at all*** | ***Great*** | ***Normal*** | ***Poor*** | ***Not at all*** | |
| 1 | இஸ்லாமிய பொருளியல் பற்றிய அறிவு | 23 | 72 | 55 | 13 | 14% | 44% | 34% | 8% | 2.6 |
| 2 | வட்டி பற்றிய அறிவு | 52 | 71 | 36 | 04 | 32% | 43% | 22% | 3% | 2.2 |
| 3 | இஸ்லாமிய வங்கியின் அடிப்படை அறிவு | 07 | 65 | 48 | 43 | 4% | 40% | 29% | 27% | 1.9 |
| 4 | இஸ்லாமிய வங்கி உற்பத்தி பற்றிய அறிவு | 02 | 49 | 44 | 68 | 2% | 30% | 27% | 41% | 2.1 |
| 5 | இஸ்லாமிய வங்கியின் சேவை பற்றிய அறிவு | 08 | 40 | 51 | 64 | 5% | 24% | 31% | 40% | 1.9 |
| 6 | இலங்கையில் இதன் வளர்ச்சி நிலை | 06 | 46 | 71 | 40 | 4% | 29% | 43% | 24% | 2.4 |
| 7 | இஸ்லாமிய வங்கிகளின் நம்பகத்தன்மை | 18 | 54 | 77 | 14 | 11% | 33% | 47% | 9% | 3.0 |
| | மொத்தம் | ***116*** | ***397*** | ***382*** | ***246*** | 10% | 35% | 33% | 22% | |

மேலும், இஸ்லாமிய வங்கியில் கணக்கு வைத்தோர் மற்றும் கணக்கு வைக்காதோர் ஆகிய ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அனைவரதும் இஸ்லாமிய வங்கி முறை பற்றிய அறிவினை

எடுத்துக்காட்டுவதாக அட்டவணை 02 அமைந்துள்ளது. இதனடிப்படையில் நோக்கும் போது, இஸ்லாமிய வங்கி முறை பற்றி சிலரே (10%) பெருமளவு அறிந்துள்ளனர். எனினும், அதிகமானோர் சாதாரணமாகவும் (35%) ஓரளவும் (33%) அறிந்துள்ளனர். அதேவேளை 22 வீதமான ஆசிரியைகள் இது குறித்து எதனையும் அறியாதோராகவுள்ளனர். மேலும், இஸ்லாமிய வங்கி முறை பற்றிய அறிவு மட்டத்தினை அறிந்து கொள்வதற்காக வழங்கப்பட்ட ஏழு வினாக்களினதும் பிரகாரம் கிடைக்கப் பெற்றுள்ள தரவுகளை வீதாசார மற்றும் இடைப் பெறுமானங்களின் அடிப்படையில் பின்வருமாறு நோக்கலாம்.

இவ்வாய்வினடிப்படையில் நோக்கும் போது, குறிப்பாக இஸ்லாமிய பொருளியல் பற்றி இவ்வாசிரியைகளின் அறிவு மட்டம் சராசரி அளவை விட சற்று அதிகமாகவுள்ளது (தெரிவின் இடைப்பெறுமானம் 2.64). இஸ்லாமிய பொருளியல் என்பது இஸ்லாத்தின் முக்கிய பகுதியாகக் காணப்படுகின்றது. எனவே இஸ்லாமிய பொருளியல் பற்றிய அறிவு இருக்கின்றது என்பதன் பொருள் இஸ்லாம் மார்க்கம் பற்றிய அறிவு இருக்கின்றது என்பதாகும். குறிப்பாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ள குடித்தொகையினர் முஸ்லிம்களாகவும் கல்வியறிவுபடைத்த ஆசிரியைகளாகவும் காணப்படுவதனால் இந்நிலையினை அவதானிக்க முடிகின்றது. மேலும், இஸ்லாமிய வங்கி குறித்த அறிவு மட்டத்தினை அறிந்து கொள்ளும் முகமாக பெறப்பட்ட தரவுகளின்படி, வட்டி பற்றிய இவ்வாசிரியைகளின் அறிவு மட்டமானது சராசரி அளவை விட அதிகமாகவுள்ளது (தெரிவின் இடைப்பெறுமானம் 3.05). இத்தரவுகளின் அடிப்படையில் நோக்கும் போது வட்டி பற்றி பெரும்பாலானோர் போதியளவு அறிந்துள்ளனர். ஏனெனில் சமூகத்தில் பரந்தளவில் அனைவராலும் பேசப்படும் பெரும் பாவமாக இது இருக்கின்றது. இவ்வாறு ஆசிரியைகள் மத்தியில் வட்டி பற்றி போதியளவு அறிவு காணப்பட்ட போதிலும் இவர்கள் அனைவரும் பாரம்பரிய வங்கிகளில் தொடர்பு வைத்துள்ளனர். இதற்குக் காரணம் இவர்களிடம் இஸ்லாமிய வங்கி தொடர்பான விழிப்புணர்வு போதியளவு காணப்படாமையாகும்.

இவ்வாய்வின்படி, இஸ்லாமிய வங்கியின் அடிப்படைகள், உற்பத்தி மற்றும் சேவை ஆகிய உள்ளக விடயங்கள் பற்றிய இவ்வாசிரியைகளின் அறிவு மட்டமானது சராசரி அளவை விட குறைவாகவுள்ளது (தெரிவின் இடைப்பெறுமானங்கள் முறையே 2.22, 1.90, 1.95). இந்நிலையானது, இஸ்லாமிய வங்கி குறித்த அறிவுப் பற்றாக்குறையினைக் காட்டுகின்றது. இதற்கு முக்கிய காரணம் இவர்கள் இஸ்லாமிய வங்கியின் கட்டமைப்பு மற்றும் செயன்முறை பற்றி அறிந்திருக்கவில்லை. எனினும் இது குறித்து பெருமளவாகவோ அல்லது சாதாரணமாகவோ அறிந்தவர்களைப் பொறுத்தவரையில் இவர்கள் இஸ்லாமிய வங்கியில் கணக்கு வைத்தோராகவுள்ளனர். ஆனால் இவ்வங்கியில் கணக்கு வைக்காதோர் இதுபற்றி அறியவுமில்லை; அறிய முயற்சிக்கவுமில்லை. ஏனெனில் இஸ்லாமிய வங்கி தொடர்பான விருப்பம், நாட்டம் மற்றும் ஈடுபாடு போன்றன காணப்படும் போதே அதன் சேவை, உற்பத்தி


மற்றும் செயன்முறை போன்ற உள்ளக விடயங்களை அறிய வேண்டும் என்ற எண்ணம் தோன்றும்.

மேலும் பெறப்பட்ட தரவுகளின்படி, இலங்கையில் இஸ்லாமிய வங்கியின் வளர்ச்சி நிலை மற்றும் இஸ்லாமிய வங்கிகளின் நம்பகத்தன்மை பற்றிய இவ்வாசிரியைகளின் அறிவு மட்டமானது சராசரி அளவை விட குறைவாகவுள்ளது (தெரிவின் இடைப்பெறுமானம் முறையே 2.46, 2.11). இதற்குக் காரணம் சமூக, பொருளாதார, அரசியல் குறித்த தற்கால நிலை பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் இவ்வாசிரியைகள் மத்தியில் மிக் குறைவாக காணப்படுகின்றமையாகும். குறிப்பாக பொருளாதார விடயங்கள் தொடர்பான அறிவுமட்டத்தில் பெண்களில் அதிமானோர் பின்னடைவாக உள்ளனர். இதனாலேயே இவர்கள் இவை பற்றி அறியவுமில்லை, அறிய முயற்சிக்கவுமில்லை. எனவே இஸ்லாமிய வங்கி பற்றிய அறிவு மட்டம் தொடர்பில் ஒட்டுமொத்தமாக நோக்கும் போது, இஸ்லாமிய வங்கி முறை பற்றிய அறிவு மிகப்பெரும்பாலான ஆசிரியைகளிடம் குறைவாகவே காணப்படுகின்றது. எனவே இஸ்லாமிய வங்கி பற்றிய அறிவு மட்டமானது அது தொடர்பான விழிப்புணர்வு மட்டத்தினை தீர்மானிக்கும். எனவே குறைவான விழிப்புணர்வினைக் கொண்ட இவ்வாசிரியைகள் இஸ்லாமிய வங்கி மீது குறைவான ஈடுபாட்டினையே காட்டுகின்றனர். விழிப்புணர்வினை பெற்றுக் கொண்டவர்கள் விழிப்புணர்வினைபெற்றுக் கொண்ட வழிமுறைகள் குறித்து வரைபடம் 02 விபரிக்கின்றது. அதன்மூலம் விழிப்புணர்வூட்ட மிகவீரியமான வழிமுறையினை இனம்காண முடிந்தது.

வரைபில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கங்களை குறித்துக்காட்டும் விழிப்புணர்வூட்டல் வழிமுறைகள் பின்வருமாறு:

1. தனிப்பட்ட முறையில் இஸ்லாமிய வங்கி ஊழியரால் அறிவுறுத்தப்படல்
2. பாடசாலையில் இஸ்லாமிய வங்கியினால் நடாத்தப்பட்ட அறிவுறுத்தல் நிகழ்வு மூலம்.
3. பிரதேசத்தில் இஸ்லாமிய நிறுவனங்களால் நடாத்தப்பட்ட அறிவுறுத்தல் நிகழ்வு மூலம்
4. இஸ்லாமிய வங்கி பற்றிய கருத்தரங்கு மூலம்
5. காட்சிப்படுத்தப்பட்ட விளம்பரப் பலகை மூலம்
6. இணையத்தளம் மூலம்
7. துண்டுப்பிரசுரம் மூலம்
8. இஸ்லாமிய வங்கி ஏதாவது நிகழ்வுக்கு அனுசரணையாளராக தொழிற்பட்டதன் மூலம்
9. தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம்
10. வானொலி நிகழ்ச்சி மூலம்
11. பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலம்
12. நண்பர்கள், பிறவாடிக்கையாளர்கள் மூலம்
13. வங்கி வெளியீடு மூலம்

வரைபடம் 02




இவ்வாறு இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வழிமுறைகளில் வினைத்திறன்மிக்கதை கண்டறியும் வகையில் வழங்கப்பட்ட 13 வினாக்களின் பிரகாரம் கிடைக்கப் பெற்ற தரவுகளை நோக்கும் போது, பாடசாலையில் இஸ்லாமிய வங்கியினால் நடாத்தப்பட்ட அறிவுறுத்தல் நிகழ்வுகளே மிகச்சிறந்த வழிமுறையாகக் காணப்படுகின்றது. ஏனெனில் ஏனைய வழிமுறைகளை விட இவ்வழிமுறை குறித்து அதியுயர் திருப்தி நிலையினை ஒப்பீட்டளவில் அதிகமானளவான ஆசிரியைகள் (12%) தெரிவு செய்துள்ளனர். இதற்குக் காரணம், பாடசாலையில் நடைபெறும் நிகழ்விற்கு நிர்ப்பந்த ரீதியில் கலந்து கொள்ளும் ஆசிரியைகள் இக்கருத்தரங்கு மூலம் விழிப்புணர்வூட்ப்பட அதிக வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. எனவே அசிரியைகளை விழிப்புணர்வூட்டுவதற்கு இது மிகச்சிறந்த வழிமுறையாக அமைகின்றது.

எனினும் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட ஆசிரியைகளில் மிகப் பெரும்பாலானோர் (88%) இவ்வழிமுறை மூலம் மிகச்சிறப்பாக விழிப்புணர்வு பெறவில்லை என்பதனை அறிய முடிகின்றது. இதற்குக் காரணம், இந்நிகழ்வுகளில் இஸ்லாமிய வங்கியின் உற்பத்திகள் மற்றும் சேவைகள் பற்றி விரிவாகவும் தெளிவாகவும் வினைத்திறன்மிக்க வழிமுறைகளைக் கையாண்டும் விளக்காமை, ஆசிரியைகளிடமுள்ள இஸ்லாமிய வங்கி பற்றிய ஐயங்களை தெளிவுபடுத்தாமை, பாரம்பரிய வங்கிக்கும் இஸ்லாமிய வங்கிக்குமிடையான வேறுபாட்டை தெளிவுபடுத்தாமை போன்றனவாகும் என இவ்வாசிரியைகள் கலந்துரையாடலின் போது தெரிவித்தனர். மேலும், இஸ்லாமிய வங்கி பற்றிய பாடசாலை மட்ட கருத்தரங்குகள் சில பாடசாலைகளில் நடைபெறவில்லை. இது குறித்து கள ஆய்வின் போது அறியக்கூடியதாய் இருந்தது.

இவ்வழிமுறைகளுள் இவ்வாசிரியைகள் சிறப்பாக விழிப்புணர்வு பெற்ற வழிமுறைகள் குறித்து நோக்கும் போது, பாடசாலையில் இஸ்லாமிய வங்கியினால் நடாத்தப்பட்ட அறிவுறுத்தல் நிகழ்வுகள் மூலம் 33 வீதமானோரும் தனிப்பட்ட முறையில் இஸ்லாமிய வங்கி ஊழியரால் அறிவுறுத்தப்பட்டதன் மூலம் 18 வீதமானோரும், பிரதேசத்தில் இஸ்லாமிய நிறுவனங்களால் நடாத்தப்பட்ட அறிவுறுத்தல் நிகழ்வு மூலம் 16 வீதமானோரும், இஸ்லாமிய வங்கி பற்றிய கருத்தரங்கு மூலம் 16 வீதமானோரும், நண்பர்கள், பிறவாடிக்கையாளர்கள் மூலம் 16 வீதமானோரும் சிறப்பாக விழிப்புணர்வு பெற்றுள்ளனர். எனினும் ஏனைய வழிமுறைகள் சிறப்பாக விழிப்புணர்வு பெற பெரிதும் துணை செய்யவில்லை.

இதற்குக் காரணம் வாசிப்பு மற்றும் தேடல் முயற்சிகளில் குறைவான ஆர்வம் கொண்ட ஆசிரியைகளுக்கு இந்த வாய்மொழி மூலமான விழிப்புணர்வூட்டற் செயன்முறைகள் சிறந்த வழிமுறைகளாகக் காணப்படுகின்றன. இஸ்லாமிய வங்கி மீது திருப்தியடைந்த வாடிக்கையாளர்கள் அவ்வங்கி தொடர்பான சிறப்புக்கள், அநுகூலங்கள் மற்றும் அதன் நம்பகத்தன்மை போன்ற விடயங்கள் குறித்து பிற நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் எத்திவைக்கின்றனர். இவ்வாறாக அனுபவ ரீதியில் கிடைக்கப் பெற்ற இஸ்லாமிய வங்கி பற்றிய அறிவானது இவ்வாசிரியைகளை இஸ்லாமிய வங்கியின்பால் ஈர்க்கின்றது. எனவே அசிரியைகளை விழிப்புணர்வூட்டுவதற்கு இவை சிறந்த வழிமுறைகளாக அமைகின்றன. மேலும், துண்டுப்பிரசுரம், பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் மூலம் இவ்வாசிரியைகளில் அதிகமானோர் சாதாரணமாகவும் ஓரளவாகவுமே விழிப்புணர்வு பெற்றுள்ளனர். இதற்கான காரணங்களை நோக்கும் போது, துண்டுப்பிரசுரம் ஆசிரியைகள் மத்தியிலும், பொது இடங்களிலும் வினியோகிக்கப்பட்டாலும் அதனை அக்கறையுடன் வாசிப்பவர்களாக இவர்களில் அதிகமானோர் இல்லை. இதுகுறித்து சில ஆசிரியைகள் குறிப்பிடும் போது தமக்கு துண்டுப்பிரசுரங்களை வாசிப்பதற்கு நேரமோ, விருப்பமோ இல்லை எனத் தெரிவித்தனர்.

இஸ்லாமிய வங்கி தொடர்பான நிகழ்ச்சிகள் பொதுவாக SLBC, பிறை FM போன்ற அலைவரிசைகளில் பெரும்பாலும் காலை மற்றும் மாலைப் பொழுதுகளிலேயே அறிவிப்புச் செய்யப்படுகின்றன. எனினும் இவ்வேளைகள் ஆசிரியைகளுக்கு வானொலி செவிமடுப்பதற்கு பொருத்தமற்ற வேளைகளாக காணப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் இவர்களில் பெரும்பாலானோர் இஸ்லாமிய விடயங்களைச் செவிமடுக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் வானொலியை நாடிச் செல்பவர்களாகவுமில்லை.

விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வழிமுறைகளுள், தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியைகளுள் அரைப்பகுதிக்கு மேற்பட்டோர் மத்தியில் எவ்வித விழிப்புணர்வினையும் ஏற்படுத்தாத வழிமுறைகளும் காணப்படுகின்றன. அதாவது, பிரதேசத்தில் இஸ்லாமிய நிறுவனங்களால் நடாத்தப்பட்ட அறிவுறுத்தல் நிகழ்வு மூலம் 50 வீதமானோரும், காட்சிப்படுத்தப்பட்ட விளம்பரப் பலகை மூலம் 52 வீதமானோரும், இணையத்தளம் மூலம் 60 வீதமானோரும், இஸ்லாமிய வங்கி ஏதாவது நிகழ்வுகளுக்கு அனுசரணையாளராக தொழிற்பட்டதன் மூலம் 50 வீதமானோரும், தொலைக்காட்சி மூலம் 62 வீதமானோரும், வங்கி வெளியீடு மூலம் 59 வீதமானோரும் எவ்வித விழிப்புணர்வினையும் பெறவில்லை.

இதற்கான காரணங்களை நோக்கும் போது, முஸ்லிம் பெண்கள் கண்காட்சி, பொருட்காட்சி, விளையாட்டுப் போட்டி, கலை நிகழ்ச்சிகள் என்பவற்றின் மீது காட்டும் ஆர்வத்தை விட, மார்க்கம் தொடர்பான நிகழ்வுகளுக்கு குறைவாகவே ஆர்வம் காட்டுகின்றனர். இது குறித்து இவ்வாசிரியைகள் கூறுகையில், பிரதேசத்தில் இஸ்லாமிய வங்கி பற்றிய கருத்தரங்குகள், அறிவுறுத்தல் நிகழ்வுகள் என்பன நடைபெற்ற போதிலும் அதில் கலந்து கொள்ளவேண்டும் என்ற நாட்டம் எமக்கு ஏற்படவில்லை எனத் தெரிவித்தனர். மேலும், விளம்பரப்பலகை இஸ்லாமிய வங்கியொன்று உள்ளது என்பதனை அறியப்படுத்தும் அதேவேளை இஸ்லாமிய வங்கியுடன் தொடர்பு வைக்க வேண்டும் என்ற எண்ணத்தினை ஏற்படுத்துமளவுக்கு தாக்கம் செலுத்தவில்லை எனும் கருத்தினை இவ்வாசிரியைகள் தெரிவித்தனர்.

பெரும்பாலான ஆசிரியைகள் இணையத்தளத்தினை பயன்படுத்துவதில்லை. அதேவேளை பயன்படுத்துபவர்களும் இஸ்லாமிய வங்கி குறித்து தேடவுமில்லை; அறிய முயற்சிக்கவுமில்லை. எனவே கல்வியறிவுபடைத்த சமூகமாக ஆசிரியைகள் காணப்பட்ட போதிலும் இவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த இணையத்தளம் மிகப் பொருத்தமான வழிமுறையாக அமையாது. மேலும், ஆசிரியைகளைப் பொறுத்தவரையில் இஸ்லாமிய வங்கி ஏதாவது நிகழ்வுகளுக்கு அனுசரணையாளராக தொழிற்பட்டது தொடர்பான அறிவிப்புக்கள் மூலம் விழிப்புணர்வு பெறும் வாய்ப்பு குறைவாகவே காணப்படுகின்றது. ஏனெனில் இவ்வழிமுறை தொடர்பான அறிவிப்புக்கள் பொதுவாக SLBC, பிறை FM போன்ற அலைவரிசைகளில் பெரும்பாலும் காலை மற்றும் மாலைப் பொழுதுகளிலேயே அறிவிப்புச் செய்யப்படுகின்றன. எனினும் இவ்வேளைகள்

ஆசிரியைகளுக்கு வானொலி செவிமடுப்பதற்கு பொருத்தமற்ற வேளைகளாக காணப்படுகின்றன. அத்துடன், தொலைக்காட்சியில் இஸ்லாமிய வங்கி குறித்த விளம்பரங்களோ, கலந்துரையாடல்களோ, வேறு நிகழ்வுகளோ அரிதாகவே ஒளிபரப்பப்படுகின்றன. எனினும் மக்கள் விரும்பிப் பயன்படுத்தும் ஊடகமாக தொலைக்காட்சி காணப்பட்ட போதிலும், தமது வங்கி குறித்து விழிப்புணர்வடையச் செய்யும் வகையில் இவ்வூடகத்தினை இஸ்லாமிய வங்கிகள் மிக அரிதாகவே பயன்படுத்துகின்றன.

வங்கி வெளியீடுகளை பெரும்பாலும் இஸ்லாமிய வங்கியில் கணக்கு வைத்துள்ளவர்களே பெற்றுக் கொள்கின்றனர். மேலும், இவ்வங்கியில் கணக்கு வைத்துள்ளோரில் கணிசமானோரே இவ்வெளியீடுகளை வாசிக்கின்றனர். எனினும் ஏனையோர் இவ்வெளியீடுகளை பெறுவதுமில்லை; பெற முயற்சிப்பதுமில்லை; அவ்வாறு பெற்றுக் கொண்டாலும் அவ்வெளியீடுகளை வாசிக்க முற்படுவதுமில்லை. எது எவ்வாறாயினும், இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வினை பெற்றுக் கொள்ளக்கூடிய இவ்வழிமுறைகளின் மூலம் ஆசிரியைகள் அடைந்து கொண்ட விழிப்புணர்வு மட்டத்தினை ஒட்டுமொத்தமாக நோக்கும் போது, இஸ்லாமிய வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வூட்டற் செயற்பாடுகள் ஆசிரியைகள் மட்டத்தில் முழுமையாக பயனளிக்கவில்லை. ஏனெனில் இவ்வாசிரியைகளில் சிறப்பாக விழிப்புணர்வு பெற்றவர்கள் குறைவாக இருக்கும் அதேவேளை எவ்வித விழிப்புணர்வினையும் பெறாதோர் அதிகளவாக உள்ளனர். எனினும் சாதாரண அளவில் இவை இவர்கள் மத்தியில் தாக்கம் செலுத்தியுள்ளன என்பதனை இவ்வாய்வின் மூலம் அறியமுடிகிறது.

விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வழிமுறைகள் அனைத்தையும் ஒப்பீட்டு ரீதியில் நோக்கும் போது, பாடசாலையில் நடைபெற்ற கருத்தரங்குகள் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகள் மற்றும் அறிவுறுத்தற் செயற்பாடுகள் ஆகியன ஆசிரியைகள் மத்தியில் அதிகளவு தாக்கம் செலுத்திய வழிமுறைகளாக காணப்படுகின்றன. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஆசிரியைகள் கலந்துரையாடலிலும் வினாக்கொத்திலுள்ள திறந்த வினாக்களிலும் இதுகுறித்து கூறுகையில் ''இக்கருத்தரங்குகளை நவீன உக்திகளைக் கையாண்டும், கேள்வி – பதில் மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கியும் சிறப்பாக வளப்படுத்த வேண்டும்'' என தெரிவித்தனர். அத்தோடு இக்கருத்தரங்குகளில், இஸ்லாமிய வங்கி என்றால் என்ன? அது சட்ட அங்கீகாரம் பெற்றதா? பாரம்பரிய வங்கியிலிருந்து அது எவ்வாறு வேறுபடுகின்றது? அது தனது பணத்தினை ஹலாலான வழிமுறைகளில் முதலீடு செய்கின்றதா? அதன் உற்பத்திகள் எவை? அதன் செயன்முறைகள் எவை? போன்ற வினாக்களுக்கான விடைகளையும் மிகத்தெளிவான விளக்க வேண்டும் எனவும் கருத்துத் தெரிவித்தனர்.

இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகளின் படி ஒப்பீட்டளவில் இரண்டாம் நிலையிலுள்ள சிறந்த வழிமுறைகளாக வங்கி ஊழியர்கள் ஆசிரியைகளை தனிப்பட்ட முறையில் அறிவுறுத்துதல்

மற்றும் இஸ்லாமிய வங்கி குறித்து திருப்தியடைந்த வாடிக்கையாளர்கள் (நண்பர்கள்) ஆசிரியைகளை விழிப்படையச் செய்தல் ஆகிய வழிமுறைகள் காணப்படுகின்றன. ஏனெனில் வங்கியின் ஊழியர்கள் அல்லது வாடிக்கையாளர்கள் அனுபவ ரீதியில் இஸ்லாமிய வங்கி குறித்து எடுத்துச் சொல்வதனால் குறித்த ஆசிரியைகள் நம்பிக்கையுடனும் எவ்வித ஐயமுமின்றி இஸ்லாமிய வங்கி குறித்து நல்லெண்ணமும் தெளிவான அறிவும் பெறுவர். இது இவர்களை இஸ்லாமிய வங்கியுடன் தொடர்பு வைக்க வழியமைக்கும். எனினும், இவை தவிர்ந்த இஸ்லாமிய வங்கிகளினால் பயன்படுத்தப்படும் ஏனைய விழிப்புணர்வூட்டும் வழிமுறைகளும் தற்கால போட்டிச்சந்தையில் பயன்படுத்தப்படும் விழிப்புணர்வூட்டும் வழிமுறைகளாகவே காணப்படுகின்றன. இருந்தபோதிலும், இவை ஆசிரியைகள் மத்தியில் விழிப்புணர்வூட்டும் வீரியமான வழிமுறைகளாக காணப்படாமைக்குக் காரணம் இவற்றை இஸ்லாமிய வங்கிகள் தாக்கம் (Effective) செலுத்தக்கூடிய உக்திகளை பயன்படுத்தி மேற்கொள்ளவில்லை.

**முடிவுரையும் விதந்துரையும்**

இவ்வாய்வின் அடிப்படையில் பின்வரும் கண்டுபிடிப்புக்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

01. இவ்வாய்வின் முதலாவது கண்டுபிடிப்பாக, கல்முனை முஸ்லிம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முஸ்லிம் ஆசிரியைகளின் மத்தியில் இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வு குறைவாகக் காணப்படுகின்றது என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது.

02. இவ்வாய்வின் இரண்டாவது கண்டுபிடிப்பு, கல்முனை முஸ்லிம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முஸ்லிம் ஆசிரியைகளின் மத்தியில் இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வு குறைவாகக் காணப்படுவதற்கான பிரதானமான காரணம், இவர்களிடமுள்ள இஸ்லாமிய வங்கி பற்றிய அறிவுப் பற்றாக்குறையாகும். இஸ்லாமிய வங்கி மீதான விழிப்புணர்வுக்கு அது பற்றிய தெளிவான அறிவு அவசியமாகும். இஸ்லாம் தொடர்பான விடயங்களை செவிமடுப்பதில் போதிய ஆர்வம் இன்மையால் இவ்வங்கி பற்றிய விழிப்புணர்வினைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புகளை அவர்கள் பயன்படுத்த முற்படாமை மற்றும் வட்டித் தொடர்பு பரிவர்த்தனை ஏற்படுத்தும் பாதிப்புக்களை தவிர்த்தலில் அவர்கள் கரிசனை கொள்ளாமை போன்றனவும் இன்னும் சில காரணங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

03. இவ்வாய்வின் மூன்றாவது கண்டுபிடிப்பு, கல்முனை முஸ்லிம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முஸ்லிம் ஆசிரியைகள் இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வினை பெற்றுக்கொள்ளக்கூடிய வினைத்திறன் மிக்க வழிமுறையாக பாடசாலை மட்டத்தில் இடம்பெறும் கருத்தரங்குகள் மற்றும் அறிவுறுத்தல் நிகழ்வுகள் என்பன இனங்காணப்பட்டுள்ளன. அத்தோடு இரண்டாம் நிலையிலுள்ள வினைத்திறன்மிக்க வழிமுறைகளாக நண்பர்கள் மற்றும் இஸ்லாமிய வங்கியின் வாடிக்கையாளர்களின்

மூலம் விழிப்புணர்வு பெறுதலும் இஸ்லாமிய வங்கியினது ஊழியர்கள் மூலம் தனிப்பட்டமுறையில் விழிப்புணர்வு பெறுதலும் இனங்காணப்பட்டுள்ளன.

## 5.2. விதந்துரைகள் (Recommendations)

இவ்வாய்வின் கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் சில விதந்துரைகள் பின்வருமாறு முன்வைக்கப்டுகின்றன.

01. இஸ்லாமிய வங்கி குறித்து அறிந்து கொள்வதில் குறிப்பாக முஸ்லிம் ஆசிரியைகள் அதிக அக்கறை காட்ட வேண்டும்.
02. பாடசாலை மட்டத்தில் இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதில் அதிபர்கள் அதிக கவனம் செலுத்தலாம்.
03. கல்வியறிவுபடைத்த பெண்களுக்கு இஸ்லாமிய வங்கி குறித்து அறிவூட்டுமுகமாக ஆரம்பக்கல்வி மட்டம் மற்றும் உயர்கல்வி மட்டங்களது பாடவிதானங்களில் இஸ்லாமிய வங்கித் துறையினையும் சேர்த்துக் கொள்ளலாம்.
04. விழிப்புணர்வுப் பற்றாக்குறைக்கான காரணங்களாக இவ்வாய்வின் மூலம் இனங்காணப்பட்டுள்ளவற்றைக் கருத்திற் கொண்டு விழிப்புணர்வு நிகழ்வுகளை மேம்படுத்தலாம்.
05. ஆசிரியைகள் விழிப்புணர்வினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வினைத்திறன்மிக்க வழிமுறைகள் இவ்வாய்வின் மூலம் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றைக் கருத்திற் கொண்டு தமது விழிப்புணர்வூட்டற் செயற்பாடுகளை மேற்கொள்வதோடு ஏனைய வழிமுறைகளையும் வினைத்திறன்மிக்க வழிமுறைகளாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.
06. இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வினை வங்கிகளின் ஊழியர்கள் மட்டுமல்லாது உலமாக்களும் மிகச்சிறந்த நவீன உக்திகளைக் கையாண்டு மேற்கொள்ள முடியும்.
07. ஆசிரியைகள் இஸ்லாமிய வங்கிகளில் வங்கிக்கணக்கினை வைத்திருக்காமைக்கான காரணங்கள் மற்றும் இஸ்லாமிய வங்கியில் வங்கிக் கணக்கு வைத்தவர்கள் பாரம்பரிய வங்கிகளிலும் கணக்கு வைத்திருப்பதற்கான காரணங்கள் என்பன இவ்வாய்வின் மூலம் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றைக் கருத்திற்கொண்டு இஸ்லாமிய வங்கிகள் தமது பௌதீக வளங்கள், உற்பத்திகள் மற்றும் சேவைகள் குறித்து வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப விருத்தி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

## உசாத்துணைகள் (BIBILOGRAPHY)


Ali Goksu, Amim Becic. (2012). *Awareness of Islamic Banking in Bosnia and Herzegovina*. [online]. Available: http://www.bankerstraininginstitute.com/LIBFA%20OCT10.pdf [Accessed february 10. 2016]

Amana Bank Annual Report 2012

Ask. (2013). *Definition of Consumer Awareness*. [online]. Available: http://www.ask.com/question/consumer-awareness-definition?ad=SEO&an=SEO&ap=google.lk &o= 102140. [Accessed February 10. 2016]

Barathy Doraisamy, Arunagiri Shanmugam, & Ravindran Raman. (2011). *A Study on Consumers' Perferences of Islamic Banking Products and Services in Sungai Petani.* [online]. Available: http://www.savap.org.pk/journals/ARInt./Vol.1(3)/2011(1.3-30).pdf [Accessed february 12. 2016]

Boundless. *Consumer Awareness.* [online].Available: https://www.boundless.com/marketing/an-overview-of-marketing/importance-of-marketing/consumer-awareness/. [Accessed february 12. 2016]

Faisal, M., Asif Akhtar, & Asad Rehman. *Awareness of Islamic Banking In India- An Empirical Study*. [online]. Available: http://www.wbiconpro.com/606-Faisal.pdf. [Accessed february 13. 2016]

Group Publication, *Fiqhul Muaamalath*, *Buhoos wa Masailul Maliyyah wal Iqthisadiyyah*, Makthabathus Shamila.

Hamid, A., & Nordin, N. (2001). A study on Islamic banking education and strategy for the new Millenium-Malaysian experience. *International Journal of Islamic financial Services, Vol. 2 No. 4*, pp. 3-11

Hareem Nayyar Khan. (2012). *Customer awareness and adoption of Islamic Banking in Pakistan.* [online]. Available: http://www.journal-archieves14.webs.com/359-366.pdf. [Accessed February 14. 2016]

Hussain Gulzar Rammal, & Ralf Zurbruegg.(2007). *Awareness of Islamic banking products among Muslims: The case of Australia.* [online]. Available: http://www.palgrave-journals.com/fsm/journal/v12/n1/full/4760060a.html [Accessed February 14. 2016]

Hussein Askari, Zamir Iqbal, Abbas Mirakhor. (2009). *New issues in Islamic finance & economics progress & challenges*. Singapore: John Wiley & Sons Ltd.

Imamudeen, S.M., *Aspects of Banking in Medieval Muslim Countries*. Dacca: Islamic Research Bereau.

Imran, M., Shahzad, A.S., & Rass M. (2010). *Awareness Level of Islamic Banking in Pakistan's Two Largest Cities*. [online]. Available: http://www.qurtuba.edu.pk/jms/default_files/JMS/5_1/JMS _January_June2010_1-20.pdf. [Accessed February 14. 2016]

Indira Nair. 2012. *Assesment f Consumer Awareness Among Undergraduate Students of Thane District - a case study.* [online]. Available: http://www.bi.go.id/NR/rdonlyres/1DFA88Z5CA3D8C637A5/19459/Grand_Strategy_of_ Islamic Banking_Market_Developme.pdf. [Accessed February 18. 2016]

Keong Lee Ling, Khor May Ling, Low Sheau Pey, & Wong Zi Hui.(2012). *Awareness of Islamic Banking Products and Services Among Non-Muslims In Malaysia.* . [online]. Available: http://eprints.utar.edu.my/582/1/BF-2012-0908204-1.pdf . [Accessed February 19. 2016]

Mansoor Khan, M., Ishaq Bhatti, M. (2008). *Developments in Islamic Banking – The Case of Pakistan*. New York: Palgrave Macmillan.

Naveed Azeem Khattak, & Kashif-Ur-Rehman. 2010. *Customer satisfaction and awareness of Islamic banking system in Pakistan.* [online]. Available: http://academicjournals.org/article/article1380713967Khattak%20and%20Rehman.pdf. [Accessed February 19. 2016]

Saleemullah (2010). Biggest challenge in Islamic banking promotion lack of awareness. *Business Recorder*, October 20.

Seethaletchumy Thambiah, Hishamuddin Ismail, & Uchenna Cyril Eze. *Customer Awareness and Current Usage of Islamic Retail Banking Products and Services in Malaysia*. [online]. Available: http://www.ajbasweb.com/ajbas/2011/October-2011/667-671.pdf. [Accessed February 20. 2016]

Yvonne Saini, Geoff Bick, & Loonat Abdulla, 2011. *Consumer Awareness And Usage of Islamic Banking Products in South Africa*. [online]. Available: http://sajems.org/index.php/sajems/article/viewFile/193/111 . [Accessed February 20. 2016]

நபில், ஏ.எல்.ஏ.எம். 2003. இஸ்லாமிய வங்கியின் தோற்றமும் வளர்ச்சியும். *மீள்பார்வை*, இதழ் - 147. கொழும்பு 12.

வாடிக்கையாளர் சேவைகள் சந்தைப்படுத்தலும் போட்டிசார் சுற்றாடலும். 2013. *Sri Lanka Institute of bankers of Srilankan (IBSL)*.

**நேர்காணல்**

Azeem Khan, M. (2016.02.04). Customer Service Officer, Al – Falah, Kalmunai.

Faris, I.M. (2016.02.05). Assistant Manager, Amana Bank, Kalmunai.